அம்பேத்காரின் அமெரிக்க பக்தி!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" : A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

னி இதழ் : ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை : ஆவணி 11உ வெள்ளி (27—8—54) வெளியூர் : ஆவணி 12உ சனி (28—8—54)	மலர் : 2 இதழ் : 64

சீட்டோவை ஆதரிக்கிறார்

பாராளுமன்றத்தில் சீற்றம்

கம்யூனிசம் காட்டுத்தீ போன்றதாம்!

நேருவின் வெளிநாட்டுக் கொள்கைமீது பாய்ச்சல்

பண்டிதர் அமெரிக்க துவேஷி என்ற பட்டம்

டாக்டர் அம்பேத்கார் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போக்கை ஆதரிக்கு முகத்தான் 'சீட்டோ'வை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று கூறியுள்ளார்.

பண்டித நேருவின் வெளிநாட்டுக் கொள்கையை அவர் வன்மையாகக் கண்டித்தார்; ஆனால், டாக்டர் அம்பேத்கார் மத்திய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தபோதும், பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கை இந்த முறையில்தான் இருந்தது என்பது விளங்கும்.

இப்போது அமெரிக்கா மீது நேரு சர்க்காருக்கு பக்தி சிறிது வளர்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

"அயல் நாட்டுக் கொள்கை என்ற பெயரில் பெரும் தவறுகளை இழைத்துவிடுவது கூடாது!"

"பிரதம மந்திரிக்கும், அமெரிக்காவுக்கும் இடையே உள்ள துவேஷத்தால்தான், தென்கிழக்கு ஆசிய பாதுகாப்புத் திட்டத்தை நேரு எதிர்க்கிறார்,"

என்று டாக்டர் அம்பேத்கார், ஆக. 26-ல் இந்திய பாராளுமன்ற மேல்சபையில் வெளிநாட்டுக் கொள்கை விவாதத்தின் போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"அமைதி, சுதந்திர ஜனநாயகம், கம்யூனிச முறைகள் இவைகளுடன் ஒத்துப் போவது என்பதுதான் பண்டித நேருவின் அயல்நாட்டுக் கொள்கை; அத்துடன், 'சீட்டோ'வின் எதிர்ப்பும் ஒன்றாகும்.

உலகில் கம்யூனிசம் படர்ந்து வருவதை அடிப்படையாகக் கொண்டு நாம் ஆராய வேண்டும்.

கம்யூனிசம், ஜனநாயகம் என்ற இரண்டும் சேர்ந்திருக்க முடியுமென்பதால், பிரதம மந்திரி பின்பற்றும் கொள்கையானது சரியாக சிந்திக்காமல் செய்திருக்கும் முடிவு என்றே கருதுகிறேன்.

எல்லோரும் அமைதியை விரும்புகிறார்கள்; ஆனால், எந்த விலை கொடுத்து?

இப்போதெல்லாம், நாடுகளைப் பிரிப்பதாலும், பிரிவு படுத்துவதாலும், அமைதி, விலை கொடுத்து வாங்கப்படுகிறது.

இன்று, ரஷ்யா ஒரு பெரிய ராட்சசன் போன்று காட்சியளிக்கிறது! அது விரும்பும் விதிகளுக்குப் பின்னே, அடிமைத்தனம் ஒளிந்துகொண்டிருக்கிறது!

கம்யூனிசம் காட்டுத் தீ போன்றது! அதற்கு வெகு தூரத்தில் உள்ள நாடுகள் வேண்டுமானால் அதனுடன் ஒத்துழைக்கப் பார்க்கலாம்; ஆனால் காட்டுத் தீயின் அருகே உள்ள இந்தியா எப்படி ஒத்துழைக்க முடியும்?

இப்படி அமைதியை விரும்புவதின் மூலம் அந்த 'ராட்சசனு'க்கு உணவூட்ட விரும்புகிறீர்கள்!

தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம், மேற்கத்திய நாடுகள், ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு இரண்டாந்தர, எதிர்ப்பு முகாம் அமைக்க விரும்புகின்றன!

சீனர்கள், திபேத்திலுள்ள லாசாவைக் கைப்பற்ற அனுமதிக்கும் நேரு, ஏன் 'சீட்டோ'வை ஒப்புக் கொள்ளக் கூடாது?" என்று டாக்டர் அம்பேத்கார் கேட்டார்.

"1945 மே மாதத்திலிருந்து இன்றுவரை, நட்பு ஆக்கிரமிப்பு என்ற போர்வையில், ரஷ்யா பத்து ஐரோப்பிய நாடுகளைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்திருக்கிறது," என்று அம்பேத்கார் மேலும் கூறினார்.

பட்டம் தாணுவின் பதட்டம்!

மக்கள் கேட்கலாம்! 'மக்கள் அரசு' கேட்கக் கூடாது!!

ஜனநாயகத்திற்கு அவர் தரும் புதிய விளக்கம்

எர்ணாகுளம், ஆக. 26—

திரு—கொச்சி ராஜ்ய முதல் அமைச்சர் பட்டம் தாணு பிள்ளை எர்ணாகுளம் சட்டக் கல்லூரியில் பேசும்போது திரு—தமிழர்களின் கோரிக்கைக்கு திரு—தமிழர் பகுதியில் மக்களிடையே ஆதரவு இருக்கிறதா என்பது சந்தேகம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'ஜனநாயகம்' என்று பேசிய அவர், ஜனநாயகம் என்பது என்னவென்பதை உணராது பொறுப்பற்றுப் பேசியிருக்கிறார்!

"நம் ராஜ்யத்தின் எந்தப் பகுதியையும் அடைய வேண்டும் என்ற சென்னை சர்க்காரின் தகாத ஆசையை திரு—கொச்சி ராஜ்ய மக்கள் முழு பலத்துடன் எதிர்க்க வேண்டும்" என்று கூறி, தமிழர்களுக்கு எதிராக மலையாளிகளின் உணர்ச்சிகளைத் தூண்டியுள்ளார்.

ஒரு பிரதேசத்தின் மக்கள், தாங்கள் மற்றொரு ராஜ்யத்துடன், இணைய விருப்பம் தெரிவித்தால், அதைப் பட்டம் அவர்களால் புரிந்துகொள்ள முடிகிறதாம்! ஆனால், ஒரு சர்க்கார் மற்றொரு சர்க்காரின் பிரதேசங்கள் மீது உரிமை கொண்டாடுவதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லையாம்!

திரு—தமிழர் அறப்போர் குறித்து பட்டம் தாணு பிள்ளை பேசுகையில் தமிழ்ப் பகுதிகளில் உள்ள மக்கள் அவ்வித இணைப்பை ஆதரிக்கவில்லை என்றும் பெருவாரியான மக்கள் அவ்வித இணைப்பை விரும்புகின்றனரா என்பதை இனிமேல்தான் பார்க்க வேண்டும் என்றும் கூறினார்.

திரு—கொச்சியில் தமிழர்கள் மோசமாக நடத்தப்படுவதாக குரோதமிக்க பெரும் பொய்ப் பிரசாரம் குறிப்பாக சென்னை இராஜ்யத்தில் செய்யப்படுவதாகவும் இதற்கெல்லாம் காரணம் மக்களுக்கு ஜனநாயகத்தை எப்படி வளர்ப்பது என்பது புரியாததால் என்றும், அவர் ஜனநாயகத்திற்குப் புதிய விளக்கம் தந்தது மட்டுமின்றி, இந்திய உப கண்டத்திலேயே காணாத அளவில் திரு—கொச்சியில் தான் மைனாரிடிகள் நன்கு நடத்தப்படுகின்றனர் என்று கூறினார்.

நவீன தர்மபுத்திரன்!

காரிகையை அடகுவைத்து சூதாடினார்!

ராஜ்கோட், ஆக. 26—

பாரதக் கதையில் வருவது போன்று, மனைவியைப் பணயமாக வைத்து சூதாடிய சம்பவம் ஒன்று சௌராஷ்டிரத்தில் தார்கரி என்ற கிராமத்தில் நடைபெற்றதாம்!

சூதாட்டத்தில் ஒருவன் தன் உடைமைகள் அனைத்தையும் இழந்து இறுதியில் மனைவியையும் பணயம் வைத்து அதிலும் தோற்றான்.

ஆனால்......! சூதாட்டத்தில் வெற்றிபெற்றவன், தோற்ற 'தரும புத்திரனின்' மனைவியை அழைத்துச் செல்லு முன்னர், ஊர் மக்கள் கூடி சமரசம் செய்து, அந்த மனைவிக்குப் பதில் எட்டு காணி நிலமும், ஒரு காளையும் கொடுக்குமாறு செய்தார்களாம்!

இதன் மூலம் 'தர்மபுத்திரர்,' தனது மனைவியை மீண்டும் பெற்றார் என்று தெரிகிறது!

நீரா இறக்கும் அனுமதி

ஆந்திர சர்க்கார் முடிவு மாறுகிறது!

ஆந்திர மாநிலம் முழுமையும் 'நீரா' இறக்க அனுமதிப்பது என்று முன்னர் செய்த முடிவை இப்போது ஆந்திர சர்க்கார் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

பிழைக்க வந்தவனே! போ, வெளியே!

ஆசாத் காஷ்மீர் பகுதியில் கலகம்

பாக். போலீஸ் விரைகிறது!

ஸ்ரீநகர், ஆக. 26—

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதிகளில் கலக நிலைமை உருவாகி இருப்பதாகவும், அதிகாரிகள், போலீஸ் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்கிறார்கள் என்றும் தெரிகிறது.

முஸ்லிம் மாநாட்டைச் சேர்ந்த சில ஊழியர்கள்தான், கலகம் செய்ய தீவிர முயற்சிகள் செய்கிறார்களாம்!

கர்னல் ஷேக் அகமதின் சர்க்கார், இது சம்பந்தமாக முஸ்லிம் மாநாட்டின் தலைவர் லெப். கான் பகதூர் கான் உள்பட சிலரைக் கைது செய்திருப்பதாகத் தெரிகிறது. பாகிஸ்தானிலிருந்து போலீஸ் படைகள் செல்கின்றன என்று தெரிகிறது.

புதுடில்லி, ஆக 26—

ஆந்திராவின் சில பகுதிகளில், தென் பகுதியான ராமலகோட்டா உட்பட்ட பகுதிகளில் வைரம் கிடைக்கக் கூடும் என்று டில்லி இந்திய சுரங்க இலாகா அப்பகுதிகளில் சுரங்க ஆராய்ச்சி வேலைகள் செய்வார்கள்.

திராவிடர்களுக்கு இலங்கை சர்க்கார் உத்தரவு!

5,000 பேர் நவம்பருக்குள் தாயகம் திரும்புவார்கள்!

கொழும்பு, ஆக. 26—

இலங்கை வாழ் இந்தியர்களுக்கான கடைசி 'சாவு மணி' அடிக்கப்பட்டுவிட்டது என்று தெரிகிறது. பிறந்த நாடு நோக்கி அவர்கள் புறப்பட வேண்டும் என்ற இலங்கை அரசாங்கத்தின் வெளியேற்ற உத்தரவுகள் அனுப்பப்படுகின்றன!

பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தம், மீண்டும் பேச்சு வார்த்தைகள் ஒப்பந்தம்—என்று இலங்கை, இந்திய சர்க்கார்களிடையே அடிக்கடி இலங்கை இந்தியர் பிரச்னை பற்றி பேசப்பட்டபோது, இலங்கையில் வாழும் அவர்கள் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த சிறு நம்பிக்கையும் இப்போது செத்து மடிந்துவிட்டது.

5,000 பேர்களைப் புறப்படுமாறு ஆகஸ்டு 31-க்குள் இலங்கை சர்க்கார் உத்தரவுகளை அனுப்பி, நவம்பர் 30 க்குள் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

'போ' என்று கூறியதுடன் மட்டும் இலங்கை அரசு திருப்தி கொள்ளவில்லை; போய்விட்டார்களா என்று பார்வையிட டிசம்பர் மாதம் முதல் இலங்கை அதிகாரிகள் திடீர் சோதனைகள் நடத்துவார்களாம்!

பிறந்த நாட்டிலே வாழ வழியின்றி, கப்பலேறி, அலை கடலுக்கு அப்பால் தூர விலகிச் சென்று 'தாய் நாடே! உன்னை என்று மீண்டும் காண்பேன்!' என்று, சென்ற திராவிடர்கள், மீண்டும் கப்பலேறப் போகிறார்கள், தாய் நாடு நோக்கிச் செல்ல! இப்போது அவர்கள், 'மீண்டும் உன்னிடமே வருகிறேன்!' என்றெண்ணி ஏங்குமாறு வடநாட்டு சர்க்கார் செய்துவிட்டது!

நம் நாடு

சென்னை 27—8—54 வெள்ளி

இலாபக் கோட்டையின் தூண்கள்!

★

"விலைவாசிகள் குறைய வேண்டும்!"
"வேதனை நீங்க வேண்டும்!"
"கொள்ளை லாபமடிப்போர் ஒழிய வேண்டும்!"
"பஞ்சம், பட்டினி போக வேண்டும்!"
"பட்டினி ஊர்வலங்கள் குறைய வேண்டும்!"
"உற்பத்தி பெருக வேண்டும்!"

என்று, நாட்டிலே, நீண்ட நாட்களாகக் கூறி வருகின்றனர்.

உணவுப் பொருள்களின் விலை, உப்பரிகையில் வாழும் மனிதனும் தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துவிட்டன என்று ஒருகாலத்தில் பேசப்பட்டது!

துணிமணிகளின் விலையோ சொல்ல வேண்டியதில்லை. ஏழையாகப் பிறந்துவிட்டவர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் கண்டு நடுங்கும்படியான அளவிற்கு உயர்ந்துவிட்டிருக்கிறது!

குடியிருக்கும் வீடுகளின் வாடகை சர்க்கார் உத்தியோகத்தில் இருப்போர்களாலும் சமாளிக்க முடியாதபடி உள்ளன!

கையில் சிறுதொகை உள்ள மக்கள் தங்களுக்கென சொந்தமாக ஒரு வீடு கட்டிக்கொள்ள இயலாத நிலையில் வீடு கட்டும் பொருள்களின் விலை உயர்ந்துவிட்டிருக்கிறது!

ஆட்சியாளர்கள் நடத்தும் கண்காட்சியிலே வைக்கப்பட்டிருக்கிற வீடுகள்தான் அழகாகவும், மலிவாகவும், ஏழைகள் குடியிருக்கும் தகுதி பெற்றதுபோன்றும் காணப்படுகின்றனவேயன்றி நாட்டிலே அதுபோன்ற வீடுகளைக் காண முடியவில்லை!

இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மற்ற நாட்டாருடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், வேதனை தருவதாக உள்ளது!

எவ்வளவோ துயரங்களைத் தாங்கிக்கொண்டு வாழ்வு நடத்தும் மக்களுக்கு, சில நேரங்களில் நம்பிக்கை நட்சத்திரம் போன்று செய்திகள் கிடைக்கின்றன.

'விலைவாசிகள் குறைகின்றன' என்று செய்திகள் கிடைத்தால், மக்கள் மனதிலே ஒரு புதிய நம்பிக்கை உதயமாகிறது!

ஆனால், ஆட்சியில் உள்ளவர்களோ, 'விலைவாசிகள் குறைகின்றன' என்ற செய்திகளை வரவேற்பதாகக் காணோம்!

நடந்த சில மாதங்களாக நாட்டிலே உணவுப் பொருள் உற்பத்தி அதிகமாகிவிட்டது என்று செய்திகள் கிடைத்திருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சியாளர்கள், 'ஐந்தாண்டு திட்டப் பிடிக்க வேண்டிய கட்டத்தை, மூன்றாண்டுகளிலேயே பிடித்துவிட்டோம்' என்று பெருமிதத்துடன் பேசினார்கள்.

ஆனால், அதை அடுத்து, வட இந்தியாவில் வெள்ளச் சேதம் என்றபோது, டில்லி அமைச்சர் கூறினார்—'வெள்ளப் பெருக்கால் வயல்கள் பாழ்பட்டுப் போனாலும், பயிர்கள் அழிந்து போனாலும், உணவுப் பஞ்சம் ஏற்படுமோ என்ற பயம் தேவையில்லை' என்று நம்பிக்கையளித்தார்!

இப்போது மக்கள் சபையிலே, அமைச்சர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் பேசியிருக்கிறார்; அவரது பேச்சு நாட்டு மக்களுக்கு நம்பிக்கை தருவதாக இல்லை; 'உணவுப் பொருள்களின் விலை குறைவதை தடுக்கப்படும்' என்று தேஷ்முக் பேசியிருக்கிறார்.

'விலை குறையுமா? ஒரு வேளையாவது வயிறார உண்ண முடியுமா?'—என்று கேட்டுக் கொண்டிருக்கும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்!

நேரு சர்க்காரின் அமைச்சர் பேசுகிறார்—'விலை சரிவு தடுக்கப்படும்,' என்று உறுதி கூறுகிறார்!

ஆதிக்க மனப்பான்மை கொண்டவர்கள், இலாப வேட்டைக்காரர்கள், நாட்டிலே காணப்படும் உணவுப் பற்றாக்குறையைப் பயன்படுத்தி பலன் அடைய விரும்புவோர் ஆகியவர்களுக்கு அமைச்சரின் சொற்கள் மகிழ்ச்சியைத் தரும்!

ஆனால், 'நாளைக்கு கஞ்சி கதி என்ன?'-என்று எண்ணி ஏங்கும் மக்கள், அமைச்சரின் 'விலைவாசிகள் கீழே இறங்காது' என்ற பேச்சைக் கேட்டால் மகிழ்வா செய்வார்கள்?

'தேசிய புனரமைப்பிலும், உற்பத்திப் பெருக்கிலும், நாடு வெகுவாக முன்னேறி விட்டோம்,' என்று கண்டிதர் அடிக்கடிப் பேசுகிறார்; ஆனால், பஞ்சாப்ராவ் தேஷ்முக், 'விலை இறக்கம் தடுக்கப்படும்,' என்கிறார்!

விலை சரிவினால், நாட்டிலே பொருளாதார சீர்குலைவையும், உற்பத்தியாளர்களுக்கு தொல்லையையும் கொடுக்குமாம்!

விலை குறைய வேண்டும் என்பது அவசியம்; அதற்காக, 'உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார்கள்,' என்பது பொருத்தமற்ற வாதமாகும்!

ஆதிக்கவாதிகளை வாழ வைத்துக்கொண்டு ஆட்சியாளர்களின் கொள்கையில் கொஞ்சம் குறையுமேயன்றி, விலை குறைவுதான் மேலிருக்க விபரீதமும் நிகழ்ந்துவிடாது!

உணவுப் பொருள்களின் விலை ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழே இறங்கினால், நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துவிடுமாம்!

பொருளாதாரம் என்பது நாட்டின் நன்மைக்கான வழிகளைக் காட்டும் அமைப்பு முறையாக இருக்க வேண்டுமேயன்றி, பொருளாதாரத்திற்காக நாட்டு மக்கள் வேதனைப்பட வேண்டுமென்பதில்லை.

நாட்டு மக்களுக்காகப் பொருளாதார அமைப்பு இருக்க வேண்டுமேயன்றி, பொருளாதார அமைப்புக்காக நாட்டு மக்கள் என்பது கூடாது!

உணவின் விலை குறைந்தால், பொருளாதார சீர்குலைவு ஏற்படும்.

அதிகமான அளவில் துணி உற்பத்தி என்றால், பொருளாதாரம் சீர்குலையும்.

அதாவது, நாட்டிலே வாழும் பெரும்பான்மை மக்களுக்கு நன்மை அளிக்கும் எந்த விதமான போக்கும், பொருளாதார சீர்குலைவுக்குக் காரணமாகும் என்று ஆட்சியை விரும்புவோர் பேசுகிறார்கள்!

முதலாளித்துவ நாடுகள்தான் இப்படிப்பட்ட பொருளாதார அமைப்பிலே இயங்கும்! காங்கிரஸ் கட்சியினரோ, 'ஏழைகளுக்கான ஆட்சி புரிகிறோம்,' என்று பேசுகிறார்கள்!

அதே நேரத்தில் டணமுதலைகள், தொழில் அதிபர்கள் இவர்களுக்கு கிடைக்கிற இலாபத்தின் விகிதம் குறைகிறது என்றாலும் அல்லது இலாபம் குறைவதற்கான அறிகுறிகள் காணப்படுகிறதென்றாலும் உடனே காங்கிரஸ் சர்க்கார் நாட்டிலே பொருளாதாரச் சீர்கேடு ஏற்பட்டு விட்டதாக அபயக் குரல் எழுப்புகிறார்கள்!

உணவுப் பொருள்களின் விலை குறைவதால் பொருளாதார சீர்குலைவு ஏற்படும்; ஆகவே, விலைகள் குறைவதைத் தடுக்கிறோம்' என்பது ஏழைகளுக்கு நன்மை செய்யும் போக்கு என்று கூற முடியுமா?

நாட்டிலே உள்ள ஆலைகளில் அதிகமான அளவு துணி உற்பத்தி ஏற்பட்டு விடுகிறதென்றால் 'பொருளாதாரச் சீர்குலைவு' என்று ஆட்சியாளர்கள் குரல் எழுப்பினால், அது முதலாளிகளின் இலாபக் கோட்டை சரிந்துவிடாமலிருக்க ஆட்சியாளர்கள் தூண்களாக நின்று, அக்கோட்டை சரியாமல் பாதுகாக்க முனைகிறார்கள் என்று பொருள் இல்லையா?

உண்மையிலேயே ஏழைகளுக்கு உதவும் சர்க்கார் ஆட்சி பீடத்திலே இருக்கிறதென்றால், விலை சரிவு ஏற்படும்போது அதற்றை வரவேற்க வேண்டும்; இதனால், சீர்குலைந்துபோகும் என்று நம்பப்படுகிற பொருளாதார அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும்.

அதுதான் நேர்மையான போக்கு! அதை விட்டுவிட்டு, விலைவாசிகளின் குறைவைத் தடுத்து நிறுத்துவது, ஏழைகளின் நண்பர்கள் செய்யும் செயல் அல்ல! முதலாளித்துவ சர்க்காரின் போக்காகும்!

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

விளாத்திகுளம் தாசில்தார் சாட்சியம்

எதிர்தரப்பு வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை

19—8—54-ல், நெல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு ராதாகிருஷ்ணமுதலியார் முன்பு தூத்துக்குடி சதிவழக்கு விசாரணை இன்று மீண்டும் தொடர்ந்து ஆரம்பமாயிற்று.

சர்க்கார் தரப்பு 7-வது சாட்சியாக கோயில்பிள்ளை நாடார் விசாரிக்கப்பட்டார். சர்க்கார் தரப்பு வக்கீல் பி. எஸ். சுப்ரமணியபிள்ளை சாட்சியை விசாரித்தபொழுது சாட்சி கூறியதாவது:—

'நான் இப்பொழுது விளாத்திகுளம் தாசில்தாராக இருக்கிறேன்; 1953 ஜூலையில் தூத்துக்குடி டிப்டி தாசில்தாராக இருந்தேன்; 15—7—53 காலை 8 மணிக்கு நான் தூத்துக்குடி ரயில்வே ஸ்டேஷனுக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தகவல் பேரில் போனேன்; கலெக்டர், சப்-கலெக்டர் போலீஸ் டெபுடி சூப்பிரண்டெண்டு, மற்றும் போலீஸ்காரர்கள் எல்லோரும் அங்கு இருந்தார்கள்; ரயில், மேலூர் ஸ்டேசனுக்கு முன்பு போகாமல் நின்று கொண்டிருந்தது; இன்ஜினுக்கு முன்னால், 100 அல்லது 150 பேர் உட்கார்ந்து மறியல் செய்து கொண்டிருந்தார்கள்; அங்கே 2000 பேர் கூட்டமாக, ரயில் தண்டவாளத்துக்குத் தென் பக்கம் வெளியே நின்று கொண்டிருந்தார்கள்; வட பக்கமும் இருந்தார்கள்; வடவாகம் என்பது ஆண்டான் தெரு; நான், ஸ்டேசனுக்கு வரும்பொழுது நடராசன், கலெக்டரிடம் பேசிக்கொண்டிருந்தார்; எனக்கு, நடராசனை முன்பே தெரியும்; அவர் தி. மு. கழகத்திற்குக் காரியதரிசி; 'சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் விடுதலை செய்யப்பட்டால், கலைந்து போவோம்,' என்று நடராசன் சொன்னார்; கலெக்டர் விடுதலைக்கு உத்தரவிட்டார்; கலெக்டர், மீண்டும் நடராசனிடம், அங்கிருந்தவர்களைக் கலைந்து போகும்படி சொல்லச் சொன்னார்; நடராசன் போய்ச் சொன்னார்; பிறகு கூட்டத்துக்குள் கலந்து கொண்டார்; தண்டவாளத்திலிருந்தவர்கள் கலைந்து போகவில்லை; கலெக்டர், என்னை அழைத்து, மீண்டும் நடராசனிடம் பேசச் சொன்னார்; நான் தண்டவாளம் வழியாக மேற்கே போய், எழுந்து போகச் சொன்னேன்; அவர்கள், மாலை 5½ மணிக்குத்தான் எழுந்து போவதாகச் சொன்னார்கள்; அவர்கள் சர்க்காருக்கு விரோதமான 'நேரு ஒழிக,' 'ராஜாஜி சர்க்கார் ஒழிக,' போன்ற கோஷங்களைக் கூறினார்கள்; நான் போலீசார் பலாத்காரப் பிரயோகம் செய்ய நேரிடும் என்று சொன்னேன்; 100 கெஜ தூரத்திற்கு மேற்கே, பிறகு நான் நடராசனை சந்தித்தேன்; —தங்களுடைய கழகத் தோழர்கள், 5½ மணி வரையில் இங்கே இருப்பதாக முடிவு செய்துவிட்டார்கள்; என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை — என்று கூறிக் கொண்டே பெருஞ்சாரம் என்றுடனே திரும்பி வந்து, கூட்டத்தோடு கலந்துகொண்டார்; நான் நடராசனிடம் பேசியதைக் கலெக்டரிடம் சொன்னேன்; கலெக்டர் போலீசைத் தயாராக இருக்கும்படி உத்தரவிட்டார்; போலீசாரை தடியடிப் பிரயோகம் செய்ய உத்தரவிட்டார்; மலபார் விசேட போலீசார் வடமேற்கு எஞ்சின் பக்கம் நின்றார்கள்; அவசியமற்ற எச்சரிக்கை கொடுக்கப்பட்டது; போலீசார் உட்கார்ந்திருந்தவர்கள் மீது தடியடிப்பிரயோகம் செய்தனர்; தடியடிப்பிரயோகம் நடக்கும்பொழுது, எங்களை கல்லெறி விழுந்தது; எஞ்சின், அதிகாரிகள் மீதும் கற்கள் விழுந்தன; கூட்டத்தின் நிலைமை மோசமாக இருந்தது; கிழக்கே கோச்சு முன்னேறி வர ஆரம்பித்துவிட்டார்கள்; சில கற்கள் போலீஸ்காரர்கள் மீது விழுந்தன; நிலைமை சமாளிக்க முடியாத அளவு போய்விட்டது; கலெக்டர், டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டுடன் விவாதித்துக் கொண்டிருந்தார்; சுடுவதற்கு உத்திரவிட்டார்; ரிசர்வ் போலீசார், ஆண்டான் தெரு பக்கம் நின்றார்கள்; அவசியமான எச்சரிக்கை கொடுத்தார்கள்; பொது மக்களைப் போய்விடும்படி கூறினார்; கலைவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை; ரிசர்வ் போலீசார் சுட ஆரம்பித்தனர்; மலபார் விசேட போலீசாரும் சுட்டனர்; கூட்டம் கலைய ஆரம்பித்தது; துப்பாக்கிப் பிரயோகம் நின்றது; வண்டி புறப்பட்டது; 3 பேர் இறந்து 20 பேர் காயப்பட்டனர்; ஆண்டாள் தெருவில் உள்ள டாக்டர் ராமசாமியைக் கொண்டு முதல் சிகிச்சை செய்யப்பட்டது; ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்; சப்கலெக்டர், டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்ட், போலீசார், ஆஸ்பத்திரிக்கும், புதுக்கிராமத்துக்கும் சென்று பார்வையிட்டனர்; புதுக்கிராமம் செல்லும்பொழுது நான் கூடவே சென்றேன்; 17-ந் தேதி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

எதிர்தரப்பு சார்பாக வழக்கறிஞர் ரா. செல்லையப்ப பிள்ளை சாட்சியை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"ரயில்வே லைனுக்குள், 1000-க்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள்—உட்கார்ந்திருந்தவர்களைத் தவிர; 8-30 மணியிலிருந்து 10-30 மணி வரை காலையில் நான் அங்குதான் இருந்தேன்; நான் ஸ்டேசனுக்கு வந்த 15 அல்லது 20 நிமிடத்திற்குப் பிறகு, உட்கார்ந்திருந்தவர்கள் எழுந்து போனார்கள்; 15—7—53-ந் தேதிக்கு முன்னால் நான் 5-வது எதிரி நடராசனுடன் பேசியது கிடையாது; ரயில் எஞ்சினுக்கும், தண்டவாளத்துக்குமிடையே வேறு ஆட்கள் கிடையாது; கலெக்டர் கேட்டுக்கொண்டதற் கிணங்க, நடராசன், அங்குள்ளவர்களிடம் 2 நிமிட நேரம் பேசினார்; நான், நடராசன் பேசியதை கேட்டேன்; 4 அல்லது 5 நிமிடம் பேசியிருப்பார்; நடராசன் என்ன பேசினார் என்பதை நான் கேட்கவில்லை; அவர் என்ன பேசினார் என்பதை நான் கேட்கவிருப்பவில்லை; உட்கார்ந்திருந்தவர்களை மலபார் விசேடப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதை நேரில் பார்த்தேன்; பலமாகத்தான் அடித்தார்கள்; அதனால் பலர் பலமான காயப்பட்டிருக்கலாம்; தடியடிப் பிரயோகத்தால் அடிபட்டவர்கள் எத்தனை பேரென்று என்னால் சொல்ல முடியாது; தடியடிபட்டவர்களை நான் பார்க்கவில்லை; நான் நீண்ட நாட்களாக தாசில்தாராக இருக்கிறேன்; உட்கார்ந்திருந்தவர்களைக் கைது செய்ய எந்த முயற்சியும் செய்யவில்லை; யாரையும் நான் கைது செய்யவில்லை; உட்கார்ந்திருந்தவர்கள், சத்தியாக்கிரகம் செய்வதுபோல் அமைதியாகத்தான் இருந்தார்கள்; அதிகாரிகள் கையும் கல்லால் அடிபடவில்லை; கல் விழுந்ததை நானே நேரில் பார்த்தேன்; கல்லை இளைஞர்களிலிருந்தும் மற்றவர்கள் வந்தன; மலபார் விசேடப் போலீசார், அல்லது ரிசர்வ்

(3-ம் பக்கம் பார்க்க)

ரஷ்ய, சீனத் தலைவர்கள்

இங்கிலாந்திற்கு அழைக்கப்படவில்லை !!

லண்டன், ஆக. 24—

சீனாவில் சுற்றுப் பயணம் செய்யும் பிரிட்டிஷ் தொழிற் கட்சிக் அரசுக் குழுத் தலைவர் அட்லி ரஷ்யப் பிரதமர் மாலென்கோவ், சீனப் பிரதமர் சௌ என். லாய் ஆகியோரை பிரிட்டனுக்கு அடுத்த ஆண்டில் வருகை தருமாறு அழைத்ததாக வெளிவந்த செய்திகளை லண்டன் வட்டாரங்கள் மறுக்கின்றன.

எதிர்க் கட்சித் தலைவரான அட்லி, பிறநாடுகளின் தலைவர்களைத் தன் நாட்டிற்கு அழைப்பதற்கான அதிகாரம் படைத்தவரல்ல என்றும் சொல்லப்படுகின்றது.

அவர், தான், ரஷ்யா, சீனா நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து விஷயங்களைத் தெரிந்து கொள்வதைப் போன்றே அந்த நாட்டுத் தலைவர்களும் பிரிட்டனை என்றாவது ஒரு நாள் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் அட்லி குறிப்பிட்டிருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட மாணவர்கள் விடுதலை !

சிங்கப்பூர், ஆக 25—

மலாயா பல்கலைக் கழக மாணவர் பத்திரிகையான "பாஜர்" என்ற இதழில் "ஆசியாவில் ஆக்கிரமிப்பு" என்ற தலைப்பிட்டு, "பிரிட்டிஷ்காரர்கள் மலாயா போன்ற நாடுகளின் சுதந்திரத்தை நசுக்குகிறார்கள்" என்று எழுதியதற்காக, அந்தப் பத்திரிகை ஆசிரியர் குழுவிலிருந்த 5 இந்தியர்களும் 3 சீனர்களுமான எட்டு மாணவர்கள் மீது ராஜத்துரோகக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது.

சீன நீதிபதியான எப். ஏ. சூவ் என்பவர், குற்றம் ருசுவாகவில்லை எனக் கூறி மாணவர்கள் மீதிருந்த வழக்கை தள்ளுபடி செய்தார்.

தென் கொரியா :

அமெரிக்க இராணுவ மயமாகிறது !

வாஷிங்டன், ஆக. 24—

தென் கொரிய ராணுவம், அமெரிக்க ராணுவ உதவியுடன் விரிவானதாகவும் பலமுள்ளதாகவும் ஆக்கப்படுவதற்கான ஒப்பந்தம் இரு நாடுகளிடையேயும் ஏற்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அட்மிரல் சான் வோன் இல் என்ற தென் கொரிய தற்காப்பு மந்திரி அமெரிக்க தற்காப்பு இலாக்கா மந்திரி சார்லஸ் வில்சனுடன் கடந்த ஜூலை 26-ந் தேதி முதல் இது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகத் தெரிய வருகிறது.

பாதுகாப்புக் காரணங்களை கருதி தென் கொரிய ராணுவம் கப்பல் படை, விமானப் படை ஆகியவை எந்த அளவு விரிவாக்கப்பட்டிருக்கின்றன இந்த அமெரிக்க ராணுவ உதவி ஒப்பந்தப்படி என்பது சொல்லப்படவில்லை.

இளைஞர் நற்பணி மன்றம்

22—8—54 மாலை 5 மணியளவில் சென்னை, இராயபுரம் கவுன் மொஹிதீன் வேட்டையில், தி. மு. கழக அடிப்படையில் தோழர் சு. சோலாதன் தலைமையில், இளைஞர் நற்பணி மன்றம் அமைக்கப்பட்டது. தோழர்கள் இளம் பரிதி, செல்வராசன், புதுவை இக்லோ, ஆ. பாரி விளக்கவுரையாற்றினர். விரைவில், மேன்படி மன்றத் திறப்பு விழாவாற்ற முடிவு செய்யப்பட்டது.

தூத்துக்குடி சதி வழக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போலீசார், யார் எச்சரிக்கை செய்தது என்று என்னால் சொல்லமுடியாது; 'மெகபோன்' மூலம் எச்சரிக்கை செய்யவில்லை; ஆகாயத்தை நோக்கியும் சுடவில்லை; கண்ணீர்ப்புகையும் பிரயோகிக்கவில்லை; வெள்ளாளர் கிளப், ஆண்டாள் தெருவுக்குப் பக்கம் இருப்பது தெரியும்; அதன் பக்கம் ஒரு எலக்ட்ரிக் போஸ்ட் இருப்பதும் தெரியும்; அதில் ஒரு குண்டு பாய்ந்ததை நான் பார்க்கவில்லை; வெள்ளாளர் கிளப் காம்பவுண்டு சுவரில் குண்டு பாய்ந்ததும் எனக்குத் தெரியாது; வெள்ளாளர் ரிக்கிரியேஷன் கிளப்புக்கும், ரிசர்வ் போலீசார் நின்ற இடத்துக்கும் 60 கெஜம் தூரம் இருக்கும்; வேணுலிங்கம் பிள்ளையை விசாரித்தது எனக்குத்தெரியும்; காயப்பட்டவர்களில் அவர் ஒருவர்; சுடப்பட்டு இறந்துபோன சீனிவாசன் பிள்ளையின் சகோதரர் மகன் வேணுலிங்கம்; வேணுலிங்கமும், சீனிவாசம் பிள்ளை வீட்டுத் திண்ணையிலிருக்கும் பொழுது சுடப்பட்டது எனக்குத் தெரியாது; அவர்கள் திண்ணையிலிருந்துதான் தூக்கிச் செல்லப்பட்டார்களென்பது எனக்குத் தெரியாது; அவர்கள் உறவினரை விசாரித்தது எனக்கு ஞாபகத்தால் சொல்ல முடியாது."

இரண்டாவதாக வழக்கறிஞர் இளம்வழுதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:—

"மலபார் போலீசார், ரிசர்வ் போலீசார் எந்தப் பக்கம் நோக்கி சுட்டார்களென்பது தெரியாது; சுட்டதை நான் பார்த்தேன்; ஆனால், எந்தப் பக்கம் சுட்டார்களென தெரியாது; வடமேற்கு பாகம் எஞ்சின் பக்கம் நின்று மலபார் விசேட போலீசார் சுட்டார்கள்; ஆண்டாள் தெருவில் ரிசர்வ் போலீசார் நின்றார்கள்."

★

8-வது சாட்சியாக சர்க்கரை தேவர், சர்க்கார் தரப்பில் விசாரிக்கப்பட்டபொழுது சாட்சி கூறியதாவது:—

"எனக்கு தூத்துக்குடி; வெற்றிலை பாக்குக் கடை ஆண்டாள் தெருவில் வைத்திருக்கிறேன்; மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேல் பக்கம் கடை இருக்கிறது; நான் காலை 6-மணிக்கு கடை திறப்பது வழக்கம்; 6-மணிக்குக் கூட்டம் இல்லை; கடையிலிருந்து மூன்றாவது வீட்டில், கிழக்கு பக்கம் நான் குடியிருக்கிறேன்; காலை 6½ மணிக்கு ரயிலை நிறுத்தப் போவதாகப் பேசிக் கொண்டார்கள்; கீழூரிலிருந்து வண்டி ½ மணி பிந்தி வந்தது; கடைக்கு முன்னால் ஆயிரம் பேர் கூட்டம் இருந்தது; தண்டவாளத்தில் 200 பேர் உட்கார்ந்திருந்தார்கள்; நான் கடையைப் பூட்டி விட்டேன்; 8 மணிக்கு போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததாகவும், அடிப்பதாகவும் இரண்டு மூன்று பேர் சொன்னார்கள்; அதே நேரத்தில் கற்கள் வந்து விழுந்தன; ஆட்களும் ஓடினார்கள்; நானும் காம்பவுண்டுக்குள் ஓடிவிட்டேன்; மாமா சத்தம் போட்டார்கள்; கேட்டைப் பூட்டி காம்பவுண்டுக்குள் போய்விட்டேன்; துப்பாக்கிச் சத்தம் கேட்டது; வண்டியும் போய்விட்டது; சாயந்திரம் 3-மணிக்குத்தான் வெளியே வந்தேன்; சம்பவம் ஜூலை 15-ந் தேதி நடந்தது; மறுநாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

சாட்சியை எம். செல்லப்ப பிள்ளை எதிரிகள் சார்பாக குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி கூறியதாவது:—

"காலை 8-30 மணிக்கு நான் கேட்டை பூட்டிவிட்டு வீட்டுக்கு போய்விட்டேன்; ஆண்டாள் தெருவில் வேறு கடைகள் கிடையாது; வீட்டுக்குள் போன பிறகு வெளியே நடந்தவைகள் எல்லாம் எனக்கு நேரில் தெரியாது; காலை 7 மணிக்கு கடையைப் பூட்டி விட்டு வீட்டுக்குள் போகவில்லை; கீழ்க் கோர்ட்டில் நான் 7 மணிக்குப் பூட்டினேன் என்று சொல்லவில்லை! தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் எங்கிருந்து வந்தார்களென எனக்குத் தெரியாது! காலையில் 7 மணி சுமாருக்கு உட்கார்ந்திருந்தார்கள்; 7 மணிக்கு ரயில் வந்துவிட்டது; ஆயிரம் பேரில், ஆண்டாள் தெருவில் உள்ளவர் யாரையும் நான் பார்க்கவில்லை; கூட்டத்தில் உள்ளவர்களிடம் நான் பேசவில்லை; தெருவில் போகிறவர்கள், ரயிலை நிறுத்தப் போவதாகப் பேசிக்கொண்டார்கள்; ஆண்டாள் தெருவில் கதவுகள் அடைத்திருந்ததை நான் கவனிக்கவில்லை; வழக்கமாக நான் கடையைத் திறப்பது 6 மணிக்கு; கடையைத் திறக்கும் பொழுது கூட்டம் கிடையாது; ஆயிரக்கணக்கான கூட்டம் பார்த்தது 7 மணிக்கு; அந்தக் கூட்டம் எங்கிருந்து வந்ததென்று தெரியாது; வீட்டுக்கும் கடைக்கும் இடையே பஜனை மடமும், புலவர் வீடும் இருக்கிறது; பஜனை மடம் காலை 6 மணி முதல் 8 மணி வரை திறந்திருக்கும்; எல்லோரும் பஜனை மடத்துக்கு வருவார்கள்; அன்று பஜனை மடத்தில் நடந்ததை நான் கவனிக்கவில்லை; நான் கடையை அடைத்தது வேறு ஒருவருக்கும் தெரியாது; நானிருக்கும் காம்பவுண்டில் மொத்தம் 3 வீடுகள் இருக்கின்றன; இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; மற்றவர்களை விசாரித்தது தெரியாது; எஞ்சின் பக்கம் சிகப்பு தலைப்பாகை போலீசார் 10, 20 பேர் இருந்தனர்; அவர்கள் எப்பொழுது அங்கு வந்தார்களென்பது எனக்குத் தெரியாது; ரயில் வருவதற்குமுன் போலீசாரைப் பார்க்கவில்லை; மாமா வீட்டில் கூலிக்கு பால் கறக்கிறேன்; மாமனார் வீட்டில் இருக்கிறேன்."

★

9-வது சாட்சியாக சையத் மகமதுவை (ரயில்வே போலீஸ்) சர்க்கார் தரப்பு வக்கீல் விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"நான் தலைமை கான்ஸ்டபிள்; மணியாச்சி ரயில்வே ஸ்டேசனில இப்பொழுது இருக்கிறேன்; 15-7-53 காலை 6-30 மணிக்கு கோயமுத்தூர் பாசஞ்சரில் நானும், நாலு போலீசாரும், துப்பாக்கி தோட்டாவுடன் பாதுகாப்புக்குப் போனோம்; கீழூரில் ரயில் புறப்பட்டது; நின்றது; நின்றவுடன், தி. மு. கழகக்காரர்கள், 'திராவிட நாடு திராவிடருக்கே,' 'ஆச்சாரியார் ஒழிக,' என்று கோஷமிட்டார்கள்; வண்டிக்குள்ளிருந்தவர்கள் கோஷமிட்டார்கள்; மேலூர் போகும்வரை 4 தடவை வண்டி நின்றது; ஒவ்வொரு இடத்திலும் வண்டியை நிறுத்தியவர்களை லோகல் போலீசார் கைது செய்து கொண்டு போனார்கள்; 4-வது இடத்தில் 'வாகுவம் பிரேக்' அமிழ்த்தப்பட்டது; பிறகு வண்டி புறப்பட்டது; 100 கெஜம் மேற்கே சென்றதும் மறுபடியும் ரயில் நின்றது; நானும் எனது குழுவினரும் கீழே இறங்கினோம்; எஞ்சினுக்கு முன்னால் சுமார் 200 பேர் உட்கார்ந்திருந்தார்கள்; வண்டி நின்ற சமயத்தில் ஒன்றிரண்டு கற்கள் விழுந்தன; நான் பிரயாணிகளை, கதவுகளை மூடிக்கொள்ளும்படி சொன்னேன்; நானும் எனது குழுவினரும் கார்டு வண்டியில் இருந்தோம்; கொஞ்சநேரம் கழித்து, துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது; உடனே கார்டு வந்து வண்டியை புறப்படச் செய்தார்; வண்டி, எட்டையாபுரம் லெவல் கிராசிங் வந்ததும், சுமார் காலை 9 மணிக்கு மறுபடியும் வண்டி நின்றது; நானும், எனது குழுவினரும் கீழே இறங்கி, எஞ்சினுக்கு முன்னால் வந்து பார்த்தோம்; அங்கே சுமார் 200 பேர் எஞ்சின் முன்னால் உட்கார்ந்திருந்தார்கள்; முதலில் கூட்டமாக இருந்தவர்களும், இந்தக் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டார்கள்; கல்லெறி ஏகமாக விழுந்தது; நான், தடியடிப் பிரயோகம் செய்தேன்; கல்லெறி, கான்ஸ்டேபிள்மீது பட்டது; எனது குழுவைச் சேர்ந்த பி. சி. 330 இடது பக்கம் கல்லெறி விழுந்தது; கார்டும், கேட் கீப்பரும், கார்டு வண்டியில் புகுந்து கொண்டார்கள்; எஞ்சினின் முன்பக்கமுள்ள கண்ணாடிகள் உடைந்துவிட்டது; டிரைவர், ஸ்டியரிங் உள்ளே அமர்ந்து கொண்டார்; சுக்கான் கண்ணாடிகள், எல்லாம் உடைந்துவிட்டன; எனது மண்டையில் இடதுபுறமும், தோள்பட்டையிலும் இரண்டு கற்கள் விழுந்தன; மண்டையில் காயம்; கூட்டம் நெருக்கியது; சுடுவதற்கு எச்சரிக்கை கொடுத்தேன்; கூட்டம் கலையவில்லை; நானும் 3 போலீசாரும் 4 ரவுண்டு சுட்டோம்; நான் தனியாக 2 ரவுண்டு சுட்டேன்; யாரும் காயப்பட்டு விழவில்லை; கூட்டம் கலைந்துவிட்டது; கார்டு வெளியே வந்தார்; வண்டியை புறப்படச் செய்து, நானும், என் குழுவினரும் 100 கெஜ தூரம் நடந்தே வண்டியை 'எஸ்கார்ட்' செய்தோம்; அதற்குப் பிறகு வண்டி போனது; 9-20-க்கு மீளவிட்டானுக்கு வண்டி வந்தது; உடைந்த கண்ணாடித் துண்டுகளையும், கற்களையும் அங்கு பாதுகாப்பிலிருந்த சப்-இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தோம்; அடிபட்ட போலீசாரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேன்; சுட்ட விஷயமாக தூத்துக்குடிக்கு போன் மூலம் செய்தி அனுப்பினேன்; தூத்துக்குடியில் சிகிச்சை பெற்றேன்; இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

சாட்சியை வழக்கறிஞர் எம். செல்லப்ப பிள்ளை குறுக்குவிசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"கீழூரிலிருந்து ரயில் புறப்படுவதற்கு முன்பே, கூட்டம் இருந்தது எனக்குத் தெரியாது; முதல் நாள் இரவு முதல் கீழூர் ரயில்வே ஸ்டேசனில்தான் இருந்தேன்; புறப்படுவதற்கு முந்தி கோஷம் இல்லை; கீழூரிலிருந்து மேலூர் வரும்வரை நானும், என் குழுவினரும் வண்டியிலிருந்து கீழே இறங்கவில்லை; நாங்கள் இருந்த வண்டியில் பிரயாணிகள் இருந்தனர்; எங்கள் வண்டியில் இருந்தவர்கள் யாரும் சங்கிலியைப் பிடித்து இழுக்கவில்லை; வண்டியில் மொத்தம் 6 பெட்டிகள் பூட்டப்பட்டிருந்தது—சரியாகத் தெரியவில்லை; எந்தப் பெட்டியிலிருந்தவர்கள் சங்கிலியை இழுத்தார்களெனத் தெரியாது; எந்தப் பெட்டியிலுள்ளவர்களைக் கைது செய்தார்களென்பதும் எனக்குத்தெரியாது; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரிக்கும்பொழுது, வண்டி முன்னால் இத்தனை பேர் இருந்தார்களென சொல்லியிருக்கிறேன்; தெற்கு மேற்கிலிருந்து கல்லெறி விழுந்தது; வண்டி முழுதும் அடைத்துதான் இருந்தது; மேலூர் ஸ்டேஷனில் சுட்டதை நான் நேரில் பார்க்கவில்லை; லெவல் கிராசிங்கும் ஸ்டேஷனுக்கும் 2 பர்லாங் இருக்கும்; மறியல் செய்தவர்கள் தி. மு. கழகத்தினர்தான்; கீழ்க்கோர்ட்டில், 'யார் இருந்தார்களென்று சொல்ல முடியாது,' என்று சொல்லியிருக்கிறேன்."

சாட்சியை, வழக்கறிஞர் இரா. இளம்வழுதி குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"கோயமுத்தூர் பாசஞ்சர் பாதுகாப்பு 'ட்யூட்டி' எங்களுக்கு; மேலதிகாரிகள் இருந்ததால், நாங்கள் கீழூரில் வண்டி நின்றபொழுது வண்டியைவிட்டு இறங்கவில்லை; ஒவ்வொரு இடத்திலும் கைது செய்து நடத்திக் கொண்டு போனார்கள்; வண்டியில் சப்-இன்ஸ்பெக்டர் வந்தார்; லோகல் போலீசார், லைனில் பாதுகாப்பு இருந்தார்கள்; இரண்டு சப்-இன்ஸ்பெக்டரை நான் பார்த்தேன்; வண்டியை நிறுத்தியவர்களைத்தான் கைது செய்தார்களென்பது எனக்குத் தெரியும்; நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை; கருப்பு சின்னங்கள், கருப்பு சட்டைகள் போட்டு வந்தார்கள்—அதனால் தி. மு. கழகத்தினர் என்று கூறுகிறேன்; கைது செய்யப்பட்டவர்கள், கருப்பு போட்டிருந்தார்களா என்பதை கவனிக்கவில்லை; ஒவ்வொரு இடத்திலும் எத்தனை பேரைக் கைது செய்தார்களென்றும் சொல்ல முடியாது; மேலூர் ஸ்டேஷனில் டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்ட், சப் இன்ஸ்பெக்டர், மாமன்னான், வேலப்பன் இருந்தார்கள்; மேலூர் ஸ்டேஷனில் கீழே இறங்கிவிட்டோம்; 1944-லிருந்து நான் தலைமை கான்ஸ்டபிள்; தி. க., தி. மு. க. இரண்டு பேரும் கருப்புச் சட்டை போடுவார்கள்; தி. மு. கழகத்தார் கருப்பு சட்டையே போடமாட்டார்கள் என்பதுபற்றி எனக்குத் தெரியாது; 17-ந் தேதி தூத்துக்குடி ஆஸ்பத்திரிக்கு வந்தேன்; 17-ந் தேதி இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; கேட் கீப்பர் அந்தோணிசாமி கல்லடிபட்டதை இன்ஸ்பெக்டரிடம் சொல்லியிருக்கிறேன்; கார்டும், கேட்கீப்பரும் ஷெட்டில் மறைந்ததை இன்ஸ்பெக்டரிடம் சொன்னதுபற்றி ஞாபகமில்லை; இன்ஸ்பெக்டர் விசாரணையின்போது, டிரைவர், 'ஸ்டியரிங்' அடியில் ஒளிந்து கொண்டார் என்பதைச் சொல்லியிருக்கிறேன்; எட்டயபுரம் லெவல் கிராசிங்கில் கண்ணாடிகள் உடைபடவில்லை; அத்தாட்சி செய்தது பற்றி எனக்குத் தெரியாது."

★

10-வது சாட்சியாக சர்க்கார் தரப்பில் சுப்ரமணியம் செட்டியார் விசாரிக்கப்பட்டபொழுது சாட்சி கூறியதாவது:—

"எனக்கு தூத்துக்குடி; பஞ்சு புரோக்கர்; 'தினத் தந்தி' நிருபர்; ரயில் நிறுத்தமன்று, நான், கீழூர் ஸ்டேஷனில் ஏறினேன்; சீசன் டிக்கட்டில் தினசரி கோவில்பட்டி போவதுண்டு; காலை 6-20 வண்டியில் ஏறினேன் (கோயமுத்தூர் பாசஞ்சர்); மேலூர் ஸ்டேஷன் போவதற்குள் வண்டி 4 இடத்தில் நின்றது; யாரோ சங்கிலியைப் பிடித்து இழுத்திருக்கிறார்கள்; பிறகு மேலூர் ஸ்டேஷனில் 7 அல்லது 7-30 மணிக்கு வண்டி வந்து நின்றது; மேலூரில் கொஞ்சம் புறப்பட்டு, பிறகு வண்டி நின்று விட்டது; தண்டவாளத்தில், எஞ்சினுக்கு முன்னால் 200 பேர் உட்கார்ந்திருந்தார்கள்; ஜனக் கூட்டம், மேற்கேயும், தண்டவாளத்திற்கு வெளியே இருபுறமும் 500 அல்லது 1000 பேர் இருந்தார்கள்; 9 மணிக்கு பிறகு வண்டிபோகும் என்றார்கள்; அதனால் வண்டியிலே உட்கார்ந்திருந்தேன்; 8-30 மணிக்கு கிராம முன்சீப், தாசில்தார் எல்லாம் வந்து, 'கல்விழும் போல் இருக்கிறது; கதவடைத்துக் கொள்ளுங்கள்,' என்று சொன்னார்கள்; கதவை அடைத்துக் கொண்டோம்; பிறகு துப்பாக்கி சத்தம் கேட்டது; பிறகு வண்டி புறப்பட்டுச் சென்றது; போல்நாயக்கன் பேட்டை, எட்டயபுரம் ரோடு சந்திக்கும் இடத்தில் மீண்டும் வண்டி நின்றது; அங்கும் ஜனங்கள் வண்டிக்கு முன்னால் உட்கார்ந்திருந்தார்கள்; கொஞ்ச நேரம்

(4-ம் பக்கம் பார்க்க)

மந்திரி தலைமையில் மறியல்!

ஆண்டவன் சன்னதியில் நுழைய அரிசனங்கள் அறப்போர்!

கோயில் பூசாரிகளின் கொட்டம் அடங்கியது! கோவில் கதவு திறந்தது!

சிவ., ஆக. 26—சட்டர்பூர் ஜமீன்தாருக்குச் சொந்தமான கோவில் ஒன்று உள்ளது.

அங்கு தாழ்த்தப்பட்டவர்கள் நுழைய அனுமதி இல்லையாம்!

ஆனால் நடந்த சனியன்று 80 அரிசனங்கள் கோவிலுள் நுழையச் சென்றனர்.

அவர்களை அழைத்துச் சென்றது யார் தெரியுமா?

விந்திய பிரதேச இராஜ்ய சமூக சேவை இலாகா மந்திரியான மகேந்திர குமார் மனுவ் என்பவர்தான் அவர்களின் தலைவர்.

ஆனால், கோவில் பூசாரிகளோ, மந்திரி தலைமையில் வந்த அரிசனக் கோஷ்டியை கோவிலுள் நுழைய அனுமதிக்கவில்லை—முதலில்!

பின், மந்திரியாரும், அந்த 80 அரிசனங்களுடன் அறப்போர் புரிய ஆரம்பித்தனர்!

போர்க்களம் எது தெரியுமோ?

அந்தக் கோவில் சன்னதி முன்பு தான் அவர்கள் களம் கண்டனர்!

24 மணி நேரம் அறப்போர் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது.

பூசாரிகள் "கோவிலின் 'புனித'த்தைப் பாழாக்க வேண்டாம், போய்விடுங்கள்," என்று 'உபதேசி'த்தார்களாம்!

என்றாலும், கோவில் முன் அவர்கள், அமைதியாக மறியல் செய்தனர், மந்திரி தலைமையில!

அதிலே அவர்கள் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்!

கோவில் கதவுகள் திறந்தன. அரிசனங்கள் நுழைந்தனர் கோவிலுக்குள்.

பூசாரிகள் கொட்டம் அடங்கி விடுகிறது. அறப்போரின் நியாயமான கொள்கை வெற்றி பெற்றிருக்கிறது.

மறியலுக்குப் பிறகு அரிசனங்கள் அந்தக் கோவிலினுள் நுழைய தாராளமாக அனுமதிக்கப்படுகின்றனராம்.

ஒரிசா பி.—சோ. தலைவர் கைது!

கட்டாக், ஆக. 26—ஒரிசா சட்டசபையில் பி.-சோ. கட்சிகளின் தலைவரான கிஷோர் மோகன் பட்நாயக் என்ற எம். எல். ஏ.-வும் இன்னும் இரண்டு பி.-சோ. கட்சி செயலாளர்களும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கடந்த மூன்று 17-ந் தேதியன்று ஒருவரை வலுச் சிறைப்படுத்தி வைத்திருந்ததாகவும், தவறான முறையில் கூட்டம் கூடியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

சென்னையில் நிலச் சீர்திருத்தம்

சென்னை மாநிலத்தில் நிலச் சீர்திருத்தம் செய்வது பற்றிய இறுதி முடிவு வரும் டிசம்பர் மாதத்திற்குள் எடுக்கப்படும். அதன் பிறகு சட்ட சபை முன் அது பற்றிய ஒரு மசோதா சமர்ப்பிக்கப்படும் என்றும் ரெவின்யூ மந்திரி மாணிக்கவேலர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

வெள்ளக் கொடுமை

1000 குடும்பங்கள் தவிப்பு!

கௌஹாட், ஆக. 26—அசாமிலிருந்து கிடைத்த செய்திகளின்படி பிரம்மபுத்திராவின் வெள்ளத்தால் ஆயிரம் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன என்றும், அதன் காரணமாக, மஜூலியில் 5000 பேர் வீடிழந்து தவிக்கின்றனர் என்றும் தெரிகிறது.

வடக்கில் பல இடங்களில் வெள்ளக் கொடுமையால் மக்கள் அல்லற்படுகின்றனர். பருவ காலம் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுகிறது! ஆனால், இங்கு பாடும் பகுதிக்கு அடுத்துள்ள அசாமில், வெள்ளக் கொடுமை தாங்க முடியவில்லை!

மழையிலும், அதன் காரணமாக பெருக்கெடுக்கும் வெள்ளத்திலும் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும் வெள்ளத்தினால் ஏற்படும் பொருட் சேதம் பல கோடி ரூபாய் மதிப்பு என்று கணக்கிடப்படுகிறது. 1000 பேர் ஆண்டுதோறும் உயிரிழக்க நேரிடுகிறது. 1953—ல் 22,000 வீடுகள் சேதமுற்றன.

பகுத்தறிவுப் படிப்பக ஆண்டு விழா

29—8—54 மாலை 6 மணிக்கு (சேலூர் வ. ஆ.) தோட்டப்பாளையம் பகுத்தறிவுப் படிப்பக ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், டி. கே. நாராயணசாமி, செல்வன் ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

29—8—54 மாலை 2 மணிக்கு திருவல்லிக்கேணி வெ. ஈ. படிப்பகத்தில் தோழர் சம்பத்குமார் தலைமையில் 'வடக்கும்-தெற்கும்' என்ற தலைப்பில் சொற் பயிற்சி நடைபெறும்.

இராயபுரம் தி. மு. கழக தோழர்கட்கு

28—8—54 மாலை 6 மணிக்கு மேல் 7 மணிக்குள் செயற்குழுக் கூட்டமும், 7 மணிக்குமேல் பொதுக் குழுக் கூட்டமும் நடைபெறும்.

சயன் தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

1—9—54 மாலை 5 மணியளவில், எண் 496, மிலிட்டரி லேன், சயான் ரோடு, பம்பாயில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது, இவ்வாண்டின் கணக்கு விவரம், முதல் ஆண்டு நிறைவு விழா, எழுதப் படிக்க மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் பற்றி பரிசீலிக்கப்படும்.

சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

1—9—54 மாலை 6 மணிக்கு அம்பாய் சவுந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றத்தின் புத்தாண்டு விழா நடைபெறும். மன்ற உறுப்பினர்கள் தவறாது அழைப்பை ஏற்றுக் கொண்டு கலந்துகொள்ளவும்.

திருமணம்

29—8—54 காலை 8 மணிக்கு செஞ்சூர் அடுத்த செ. 17 .... தோழர் ... கோவிந்தசாமி—... நிருஞ்சிக்கு திருமணம். தோழர் ... கோவிந்தசாமி, ... தலைமையில் நடைபெறும். தோழர் ... குன்றத்திலிருந்து பல தோழர்கள் ... அன்பழகன், கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கழகக் கூட்டங்கள்

★

கல்லக்குடி தி.மு.க.

முதல் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

29—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: அ. தம்புசாமி

பேசுவோர்:

சி என் அண்ணாதுரை

ஏ. பி. தருமலிங்கம்

அ. பொன்னம்பலனார்

* * *

குறிப்பு:—காலை 8 மணிக்கு அல்பில் தோழர் ஏ. பி தருமலிங்கம் அவர்கள் தி. மு. கழகக் கொடியை ஏற்றி வைப்பார். காலை 10 மணிக்கு கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெறும்.

★

திருச்சி

டவுன் ஹால் முன்

30—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். எஸ். மணி

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

கே. ஆர். ராமசாமி

—திருச்சி பெரியகடை வீதி தி மு கழகம்

★

துறையூர்

அரண்மனை பிள்ளையார் கோயில் திடலில்

31—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்:

பி. அரங்கசாமி, எம். எல். ஏ.

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

அ. பொன்னம்பலனார்

* * *

31—8—54 மாலை 3 மணிக்கு துறையூர் பஞ்சாயத்து போர்டார் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கட்கு வரவேற்பு அளிப்பார்கள்.

★

குரவப்புலம்

சத்திரத்திற்கு முன்புறம்

29—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: பி. எஸ் நடேசன்

பேசுவோர்:

என் எஸ். இளங்கோ

ஜி. கிருஷ்ணன்

திரு. வி. க. பிறந்த தின விழா

29—8—54 மாலை 6 மணிக்கு பெரம்பூர் திரு வி. க. மன்றத்தில் தமிழ்ப் பெரியார் திரு வி. க அவர்கள் பிறந்த தின விழா சென்னை கல்வி சங்க ஆசிரியர் தோழர் த. வெ. முருகேசனார் தலைமையில் ப. கோவிந்தசாமி சொற்பொழிவாற்றுவார்.

• • •

29—8—54 மாலை 5 மணிக்கு ஆமைக்கப் கோர்டு படைசாலையில் தோழர் இராசமாதர் தலைமையில் தமிழ்ப் பெரியார் திரு வி. க. பிறந்த நாள் விழா கொண்டாடப்படும். தோழர்கள் சாமி சிதம்பரனார், ஏ. சீனிவாசன் ஆகியோர் பேசுவர்.

நகர முன்னேற்ற கழகம் துவக்க விழா

★

29—8—54 மாலை 6 மணிக்கு இராசபாளையத்தில் மேற்படி கழகத்தின் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் எஸ். ஜான் டேவிட் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம் இரத்தினம், என். எம் செல்லையா, பி. எஸ். பி கே. ஜெபராஜ் பாண்டியன், எம். ராமசாமி, வே. ஏசுதாசன் ஆகியோர் பேசுவர்.

திருமண அழைப்பு

அன்புடையீர்! திருவள்ளுவராண்டு 1985 ஆவணித் திங்கள் 14-ம் நாள் (30-8-54) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தி மு.க. பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் என்னுடைய மூத்த மகன் நிறைநாட்செல்வன் வி. துரைசாமிக்கு திருச்சி, ஆண்டார் வீதி, (மறைந்த) டி. கே. குமாரசாமி பிள்ளை மகள் நிறைநாட்செல்வி சாரதாமணியை திருமணம் செய்விக்க ஆன்றோர்கள் உறுதி செய்தவாறு, முசிறி தாலுகாவைச் சேர்ந்த திருச்சி கோய் மலையை அடுத்துள்ள குஞ்சா நாயக்கன்பாளையம் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

டி. கே ராமசாமி பிள்ளை, பிராட்டியூர்

ரா வீரப்பப் பிள்ளை, மிலக்கிழார், குஞ்சநாயக்கன்பாளையம்

தூத்துக்குடி சதி..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கழித்து சுடும் சத்தம் கேட்டது; வண்டியில் எதிர்கொண்டேன; மறுநாள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

சாட்சியை வழக்கறிஞர் இளம்வழுதி குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி கூறியதாவது:—

"நான், 'தினத்தந்தி'க்கு இந்த செய்தியை அனுப்பவில்லை; காரணம், வேறொரு நிருபர் அடூல என்பவர் இருக்கிறார்; வியாபாரம் சம்பந்தமான செய்தியை அனுப்புவேன்; எங்கள் நிருபர், இரவு, செய்தி அனுப்பியதாகச் சொன்னார்; கோவில்பட்டியிலிருந்தும இந்தச் செய்தியை நான் அனுப்பவில்லை; நான் ஒரு காங்கிரஸ் அபிமானி; எனக்குப் பிடிக்காத கட்சி ஒன்றும் கிடையாது; தி. மு. க.-வுக்கும் எனக்கும் விரோதம் கிடையாது; கீழ்க்கோர்ட்டில் கடைசி பெட்டியில் பிரயாணம் செய்தேன் என்று சொன்னது இப்பொழுது ஞாபகமில்லை; வண்டி நின்று ¾ மணி நேரம் கழித்த முன்சீப், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அதவைத்துக் கொள்ளச் சொன்னார்கள்; நான் இருந்த பெட்டியில் 4 அல்லது 5 பேர் பிரயாணம் செய்தார்கள்; வண்டி வந்ததும், ஜனங்கள் இறங்கி வேடிக்கை பார்த்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை; கதவை மூடி கால் மணி நேரத்திற்குப் பிறகு துப்பாக்கி சத்தம் கேட்டது; எட்டையாபுரம் லெவல் கிராசிங்கில் இறங்கியதை இன்ஸ்பெக்டர் விசாரித்தபொழுது சொன்னது விஷயமாக ஞாபகமில்லை; வண்டி நின்ற இடங்களில் நான் கீழே இறங்கவில்லை; வண்டி புறப்படும் வரை இறங்கவில்லை; சங்கிலியை பிடித்து இழுத்தது யார், என்ன காரணம் என்று என்னால் சொல்ல முடியாது."

★

11-வது சாட்சி ரத்தினசாமி. சர்க்கார் தரப்பில் விசாரணை செய்யப்பட்டபொழுது கூறியதாவது:—

"நான் ரயில்வே கான்ஸ்டபிள்; சம்பவம் நடக்கும்பொழுது மானாமதுரையில் வேலையில் இருந்தேன்; 14-ந் தேதி இரவு தூத்துக்குடிக்கு பந்தோபஸ்துக்காக 'டியூட்டி'க்காக வந்தேன்; கோயமுத்தூர் பாசஞ்சர் வண்டி காலை 6-25க்குப் புறப்பட்டது; 4 இடங்களில் வண்டி நின்றது, மேலூர் ஸ்டேஷனில் வண்டி நின்றது; அங்கிருந்து புறப்பட்டு 100 கஜம் போனதும், திரும்பவும் வண்டி நின்றது; ஜனங்கள் லைனில் உட்கார்ந்திருந்தார்கள்! 200 பேர் இரண்டு பக்கமும், 2000 பேர் ஜனக்கூட்டமும் இருந்தது; நான் கார்டுவானில் பக்கத்தில் இருந்தேன்; கொஞ்ச நேரம் கழித்து துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது; பிறகு வண்டி புறப்பட்டது; நான் வண்டியிலே போனேன்; 3-வது கேட்டில் போய் வண்டி நின்றது; நானும், என்னுடன் சேர்ந்தவர்களும் கீழே இறங்கினோம்; அங்கும் 200 பேர் லைனில் உட்கார்ந்திருந்தார்கள்; அவர்களைக் கலைந்து போகச் சொன்னோம்; அவர்கள் போகவில்லை; தடியடிப்பிரயோகம் செய்தோம்; கூட்டம் எதிர்த்து வருவதுபோல இருந்தது; கல் லெறி விழுந்தது; எனக்கு இடது கையில் காயம் உண்டு; சுட்ட பிறகு, லைனில் இருந்தவர்கள் கலைந்து போய் விட்டார்கள்; வண்டியும் புறப்பட்டது; மீளவிட்டான் போனேன்; மீளவிட்டானிலிருந்து தூத்துக்குடி ஜங்ஷனுக்கு வந்துவிட்டேன்; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.'

சாட்சியை வழக்கறிஞர் இளம்வழுதி குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"கார்டு வானில் நான் மட்டும் தான் இருந்தேன்; நான் இருந்த வண்டியில 5 அல்லது 6 பேர் பிரயாணிகள் இருந்தனர்; கீழே இருந்து மேலூர் வரும் வரை நான் ஒரு இடத்திலும் கீழே இறங்கவில்லை; எதற்காக ரயில் நின்றது என்று தெரியாது; எனக்கு பார்சல் வான் 'டியூட்டி'; —அதனால் கீழே இறங்கவில்லை; 'எட்டு' விசில் அடித்ததால், 3-வது கேட்டில் இறங்கினேன்; இன்ஸ்பெக்டர் என்னை 17-ந் தேதி விசாரித்தார்; ஆஸ்பத்திரிக்கு 15-ந் தேதி போனேன்; இன்ஸ்பெக்டர் விசாரித்தபொழுது கையில் பட்ட அடிபற்றி கூறியிருக்கிறேன்; தூத்துக்குடி ரயில்வே போலீஸ் ஸ்டேஷனில் பிராது கொடுத்திருக்கிறேன்."

இரண்டாவதாக, வழக்கறிஞர் கந்தையா நாடார் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்த பொழுது சாட்சி கூறியதாவது:—

'அன்று மொத்தம் வண்டியில் 7 அல்லது 8 பெட்டிகள் இருந்தன"

★

12-வது சாட்சியாக சப்-இன்ஸ்பெக்டர் பாஷ்யம் நாயுடு சர்க்கார் தரப்பில் விசாரிக்கப்பட்டபொழுது, சாட்சி கூறியதாவது:—

"சம்பவகாலத்தில், நான், தூத்துக்குடி ரயில்வே போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்; எனக்கு மீளவிட்டான் பாளையத்தில் தீ வைத்து விட்டதாக தகவல் கிடைத்தது; நான் ரயில்வே சட்டம் 128, 435-ன் படி ஒரு வழக்கு பதிவு செய்தேன்; பாலத்தண்டைப் போனேன்; 2 கட்டைகள் பாதி எரிந்து இருந்தன; பனங்கட்டை, மூன்கள் போட்டு எரிக்கப்பட்டு இருந்தன; நான் போவதற்கு முன்னாலேயே நெருப்பு அணைக்கப்பட்டு நெருப்பை அணைத்து இருந்தது; தந்திக் கம்பிகள் மூன்று அறுந்து கிடந்தன; தண்டவாளத்தை இணைக்கும் ஆணி ஒன்று தவறி இருந்தது; 3 ... 12-30 மணிக்குப் போனேன்; மீளவிட்டானிலிருந்து ஒருவர் செய்தி வந்தது; அதையும் ஒரு வழக்காகப் பதிவு செய்து கொண்டேன்.'

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ... தோழர் இரா. இளஞ்... ... அவர்கள் ... (இந்த ...) ... ஆகியோர்; சி. என். அண்ணாதுரை ...